முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் பேயாழ்வார் அருளிய ஒளி சூட்சும நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

13.01.2019, ஞாயிற்றுக்கிழமை

1. **அருள்மிக்க ஞான குருவே**
   **அருள்மிக்க மாதவ குருவே**
   **பொருள் வளமும் புண்ணியபலமும்**
   **பெருகி கலியுகம் சிறக்க**
2. சிறக்கவே ஞானியாக வந்த அரங்கனே
   சேவையென தருமவழி கண்ட தேசிகனே
   மறுக்கவிலா உன் கொள்கை வளர
   மண்ணுலகே மாற்றம் காணுமெனக் கூறி
3. கூறியே ஒளி சூட்சும நூலை
   குறையிலா **விளம்பி சிலை திங்கள்**
   **தெரியவே எழுநான்கோர் திகதி கதிர்வாரம்**
   **(விளம்பி வருடம் மார்கழி மாதம் 29ம் நாள் 13.01.2019, ஞாயிற்றுக்கிழமை)**
   **தேசிகனுக்கு பேயாழ்வார் யானும்**
4. யானும் உலகநலம்பெற உரைப்பேன்
   உயர்வான ஞானவான் அவதாரம்
   ஞானவழி கண்ட இவை நாளில்
   ஞானியரை கண்டு வணங்கி மக்கள்
5. மக்களெல்லாம் ஆசி தீட்சை பெற்று
   மண்ணுலகில் தருமத்தில் உதவி
   தேக்கமிலா தொடர் தொண்டாற்ற
   தேசிகன் மேலான நம்பகம் கூட்ட
6. கூட்டவே அரங்கன் தரும சக்தி
   குறையிலா காப்பு வேலியாக பரவி
   திட்டமுடன் மக்களுக்கு பாதுகாப்பும்
   தெளிவும் திடமான ஞானமும் கிட்டும்
7. கிட்டவே தமிழகம் தொட்டுமே
   குருவரங்கன் ஞானக் கொள்கை
   தட்டாது பரதம் உலகம் என
   தயவுபட எங்கும் பரவி வர
8. வருகவே கலியுகம் தானும்
   வலுவான தருமபலம் பெருகி
   முருகன் ஆளுமைக்கு உண்டான
   முழுமையான ஞானயுகமாக மாறும்
9. மாறவே இவை நன்னாள் முதல்
   மாதவசிகளின் தேடல் பெருகி வர
   தேறவே கலிகால மக்களே
   தேசிகனை நோக்கி வருதலுற
10. வருவதுடன் சுத்த சைவநெறிபட
    வலுவான தரும பலமுடன் வாழ
    குருவேயென சரணடைவு கொண்டு
    குடிலில் தங்கி சேவை ஆற்றிட

11. ஆற்றல் கூட நித்ய பூசையும்
ஆறுமுகனார் வழிபாடும் பெருக்க
தேற்றமுடன் வரும் மக்களெல்லாம்
தேசிகனார் மூலம் தவசிகளாவர் ஒளி சூட்சும நூல் முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

**மகான் பேயாழ்வார் அருளிய ஒளி சூட்சும நூலின் சாரம் :**

எல்லையில்லா அருள்பலம் பெற்றிட்ட ஞானகுருவே அருள்மிக்க மாதவங்கள் செய்து வெற்றி கண்டிட்ட மாதவ குருவே துன்பம்மிக்க கலியுகம், பொருள் வளமும் புண்ணிய பலமும் பெருகி கலியுகம் சிறப்படையவே முருகப்பெருமானின் அவதாரமாக யுகமாற்ற ஞானியாக அவதரித்திட்ட ஆறுமுக அரங்கமகா தேசிகனே அற்புதமான உமது பெருமைகளை உலகறியக் கூறியே உலக நலம் கருதி **விளம்பி வருடம் மார்கழி மாதம் 29ம் நாள் 13.01.2019, ஞாயிற்றுக்கிழமையான** இன்றைய தினமதினிலே ஒளி சூட்சும நூல்தனையே பேயாழ்வார் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் பேயாழ்வார்.

உலக மக்களுக்கு தொண்டுகள் செய்து தானதருமங்கள் செய்து தருமத்தின் வழிதனிலே செல்வதே ஜென்மத்தைக் கடைத்தேற்றும் என தர்மத்தின் வழிதனை உலகோர்க்கு அளித்து தருமவழிதனை கண்டிட்ட தேசிகனே மறுக்க முடியாத உயர்ஞான கொள்கையான உமது கொள்கை வளரவளர உலகமே தர்மஉலகமாக மாறிடும்.

கலியுக மாற்றம் நடத்திட அவதாரமாக வந்துதித்த அரங்கமகானின் அவதார நாளான, ஞானவழிதனை உலகம் கண்டிட்ட நாளான இந்த நன்னாளிலே அரங்கனின் அவதார நன்னாளிலே உலக மக்களெல்லாம் பயபக்தியுடன் அவதார ஞானி அரங்கமகா தேசிகனை கண்டு வணங்கி தீட்சை உபதேசம் பெற்றிட வேண்டும். அரங்கன் செய்யும் தானதருமங்களிலே பங்கு கொண்டு தொண்டுகள் செய்தும் பொருளுதவிகள் செய்தும் தடையேதும் இன்றி பொதுநலத்துடன் தொண்டுகளை செய்து வருவதுடன் அரங்கனின் மேல் முழுநம்பிக்கை வைத்து செயல்பட வேண்டும்.

ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் மீது நம்பிக்கை வைத்து தர்மங்களை உறுதியுடன் செய்து வரவர, உலகின் தருமசக்தி பெருகி அதுவே இவ்வுலகை குறைகள் இன்றி காக்கின்ற தர்மவேலியாக அருள்வேலியாக மாறி உலகமெலாம் பரவி உலக மக்களுக்கு பாதுகாப்பும் சிந்தை தெளிவும் உண்டாக்கி உலகோர்க்கு திடமான ஞானத்தையும் தந்தருளும்.

இவ்வித மாற்றங்கள் எல்லாம் ஞானபண்டிதனாரின் தமிழகத்தில் இருந்து துவங்கி வளர்ந்து பாரத தேசம் முழுதும் பரவி பின்னர் படிப்படியாக உலகமெங்கும் குரு அரங்கனின் ஞானக்கொள்கைகள் பரவி வரவர, உலகமே கலியுக துன்பங்களில் இருந்து விடுபட்டு வலுவான தருமபலம் பெருகி முருகப்பெருமான் ஆட்சியான ஞானஆட்சி நடப்பதற்கு உண்டான முழுமையான ஞானஉலகமாக இவ்வுலகம் மாறிடும்.

ஆதலினாலே அரங்கமகா தேசிகன் அவதரித்த அரங்கனின் அவதார திருநாள் முதல் உலக ஞானிகளின் ஞான தேர்விற்கான தேடல் நிகழ்வு பெருகி வருகுதப்பா. அப்படிப்பட்ட ஞானத்தேடலில் தேர்ந்து ஜென்மத்தைக் கடைத்தேற்றிக் கொள்ள கலிகால மக்களே நீங்களெல்லாம் மனம் உருகி நம்பிக்கையோடு ஆறுமுக அரங்கமகா தேசிகனை நாடி வந்து ஆசிகளை பெறுவதுடன் அரங்கன் வகுத்த சுத்த சைவநெறியைக் கடைப்பிடித்து தருமபலம் குன்றாது தாராளமாய் தருமங்களை செய்து தருமபலத்துடன் வாழ்ந்து குருவே அரங்கா சரணம் என்றே அரங்கன் திருவடி பணிந்து சரணடைவு கொண்டு வாழ்வதுடன் அரங்கனின் ஏழாம் படை வீடு துறையூர் ஓங்காரக்குடிலினை சார்ந்து தொண்டுகள் செய்து வருவதுடன் தினம்தினம் மறவாமல் ஞானிகளை வழிபாடுகள் செய்வதுடன் முருகப்பெருமானையும் தினம் தினம் மறவாமல் பூஜைகள் செய்தும் ஜென்மத்தைக் கடைத்தேற்றிக் கொள்ளும் வல்லமை மிக்கோராய் உள்ள மக்களெல்லாம் ஆறுமுக அரங்கமகா தேசிகனார் மூலமாய் தேசிகனாரின் அருளாசியினால் தவசிகளாக ஆகி ஞானிகளாவர் என தமது ஒளி சூட்சும நூல் மூலம் உலகறிய உரைக்கின்றார் மகான் பேயாழ்வார்.

–சுபம்–